குழுவின் அறிக்கையின் மீது விவாதத்தை நடத்த தாங்கள் அருள் கூர்ந்து ஏற்பாடு செய்வீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு நோட்டீஸ் கொடுங்கள். விவாதிக்கலாம். Papers laid on the Table of the House என்று ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். That Committee will be definitely look into it. அரசியல் சட்டத்திலே Article 323 (2) says that it shall be the duty of a State Commission to present annually to the Governor of the State a report as to the work done by the commission. இதை 2 வருடம் தாமதமாக கொடுத்து இருக்கிறார்கள். They have not followed the letter of the Constitution. (குறுக்கீடு) ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இனிமேல் சரியாக கொடுக்கவேண்டும் என்று அவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

You will all be in the Committee and pull them up.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் பப்ளிஷ் ஆனதை 1986-ல் அவையில் வைத்தால் எப்படி? 1986-ல் வெளியிட வேண்டிய அவசியம் என்ன? முன்பே வெளியிட்டு இருக்கலாமே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். Papers laid on the table of the House. என்ற ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அதிலே தெரிவித்து, அங்கே விவாதித்து அதைப் பற்றி இந்த அவைக்கு தெரிவிக்கலாம்.

(ஆ) தனி நபர் கார்த்திகேயன் ஊதியக் குழுவின் அறிக்கை குறித்து

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசிடமிருந்து ஒரு மிக முக்கியமான தகவலைத் தெரிந்து கொள்வதற்காக இந்தப் பிரச்சனையைக் கிளப்புகிறேன். மே மாதம் முதல் வாரத்தில் கார்த்திகேயன் கமிஷன் அறிக்கை வந்து விடும், வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இன்று, இரண்டாவது வாரம் முடியப் போகிறது. அந்தக் கமிஷன் அறிக்கை வந்துவிட்டதா ? அது வந்ததற்குப் பிறகு அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைக் கலந்து பேசி, அவர்களோடு ஒரு பேச்சு வார்த்தை நடத்தியதற்குப் பிறகு அந்த அறிக்கையை வெளியிட அரசு முன்வருமா ? அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவகாசம் கேட்ட வகையில், மே மாதம் 15ஆம் தேதி வாக்கில் தான் அவர்கள்

அறிக்கை தருவதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசு ஆய்ந்து தக்க முடிவு எடுக்கும். அதற்கிடையில் யாரையும் கலந்து எந்த முடிவும் எடுக்கிற தன்மைகள் எந்த ஒரு அறிக்கையைப் பொறுத்தும் மேற்கொண்டதில்லை. அந்த முறையைத்தான் இப்போதும் அரசு மேற்கொள்ளும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்வது சரியல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏர்போர்ட், பஸ் ஸ்டாண்டில் பேசுவதையெல்லாம் அவையில் குறிப்பிடுவது கூடாது.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யூகத்தில் இதுபோன்றெல்லாம் கேட்கக்கூடாது. இவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24-4-1986 அன்று, இந்த அவையிலே பணியாற்றுகிற சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்களுடைய வீடு தாக்கப்பட்டதாகவும், அவர் வருகிற பஸ்ஸைத் தாக்கியதாகவும், ஏற்கெனவே 6 உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கவன ஈர்ப்பை நான் பரிசீலித்திருக்கிறேன். மாவட்டக் கண்காணிப்பாளரிடம் கேட்டு இருக்கிறேன். இன்னும் பதில் வரவில்லை. ரிப்போர்ட் வரவில்லை. (குறுக்கீடு).

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: ஆளுங்கட்சி சார்பிலே 6 பேர் கொடுத்திருக்கிறோம். இன்னும் 2 நாட்கள்தான் சபை இருக்கிறது. எனவே.......

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.